உதயதாரகை.—MORNING STAR.

Published on the 1st and 3d Thursday of every Month at one shilling a Quarter, payable in advance

௨ புத் சஞ்சிகை ௰௬] ௲௮௱௪௰௨ ௵ ஆவணி. ௰௮, தேயதி வியாழக்கிழமை, Thursday, August, 18, 1842 [Vol II No 16

பாண்டிவளநாட்டுச் சரித்திரக்குறிப்பு

(Historical sketch of the Pandian kingdom)

(Continued from page 177)

விசயநகரத்து ராசாக்கள் பதினாறுஞ்சகத்துக்கு முன்னே கிஷ்ணை (Krishna) ஆற்றுக்குத் தெற்கேயிருக்கிற அநேகந் தேசங்களிலே தங்களுடைய பெரிய அதிகாரத்தை ஸ்தாபித்திருந்தார்கள் ஆனாலும் அவர்கள் அந்தத்தேசத்து ராசாங்கத்தை அந்தத் தேசத்து ராசாவின் வசத்திலே விட்டுவைத்துத் தாங்கள் அவர்களுக்கெல்லாம் பெரிய ராசாவாகிய அந்தஸ்துள்ளவர்களென்று அவர்கள் ஒத்துக்கொண்டு மதித்திருக்கிறத்தோடேயும், அவசரமான காலங்களிலே பண ஒத்தாசைபண்ணிக்கொண்டு படைத்துணை வருகிறத்தோடேயும், திருத்தியாயிருந்தார்களென்று பெரும்பாலுங் காணுகின்றது, விசயநகரத்து கிஷ்ணராசன் துரைத்தனகாலத்திலே பாண்டியதேசமும் சோழதேசமும் அதற்குரிய ராசாக்களாலேயே ஆளப்பட்டுக்கொண்டன வீரசேகரனென்ற சோழனுக்கும், சந்திரசேகரன் அல்லது சந்திரகுமாரனென்ற பாண்டியனுக்கும் ஒரு யுத்தம் நேரிட்டது அந்த யுத்தத்திலே மதுரைராசாவானவன் முறிந்துபோய்த் தன்னிராச்சியத்தைவிட்டு ஓடிப்போம்படியாகக் கட்டாயப்பட்டு, இந்தச் சிறுமையோடே கிஷ்ணராயனிடத்திலே போய்த் தன்னை யாதரிக்கச்சொல்லியும், உதவிசெய்யச்சொல்லியும் அடைக்கலம்புகுந்து குறையிரந்தான் இந்த விசயநகரத்து ராசா அந்தச் சமயத்துக்கொத்துக்கொண்டு தங்கள் மாட்டுமந்தைக்குமேல் விசாரணைக்காரனாயிருந்த நாகம நாயக்கனென்கிறவனுக்கு அநேக ஸ்தோமங்களைக்கொடுத்து அந்தப் பாண்டியராசனை மதுரையிலே மறுபடியும் ஸ்தாபிக்கச்சொல்லியும், தஞ்சாவூர் இராசாவை அவனுடைய துணைவுகரத்துக்காகத் தண்டிக்கச்சொல்லியும் அவனை அனுப்பினான் அந்தக் கட்டளைகளுவிலே நிறைவேற்றச் சந்திரசேகரன் தங்கள் முன்னோர்களுடைய சிங்காசனத்திலே மறுபடியுமுட்காந்தான் ஆனபோதைக்கும், அந்தப் பாண்டியனுக்கு நாகமநாயக்கன் இராசரீகங் கொடுத்தான் ஏனென்றால், நாகம நாயக்கன் கிஷ்ணராயனுக்கு முதலாய்ப் பயப்படாமல் அவன் ஆணைகளையும் ஆக்கினைகளையும் நிராகரித்து அந்த மதுரை இராசனைச் சிறையிலேவைத்துப் போட்டு அந்த ராச அதிகாரத்தைத் தன வசமாய் வைத்துக்கொண்டான் அப்பால், தனது செளுதிப்பது செய்ததும், தனது கட்டளைகளை மீறித் தன்னோடே கலகத்துக்கேற்பட்டதும் கிஷ்ணராயனுக்குத் தெரியவந்தன

நாகம நாயக்கன் புதிதாய்ச்சம்பாதித்த அதிகாரத்துக்காகத் தண்டிக்கப்படாமல், முழுதுந் தப்பிக்கொண்டவனுக்குக் காணப்பட்டபடியினாலே அவனுடைய சவுரியத்தையும், நடத்தையையுங்குறித்து விசயநகரத்துப் படைத்தலைவர்களுக்கு வெறுப்புண்டாகி அவனைத் தண்டிக்கவேண்டுமென்று புறப்பட்டார்கள் ஆனபோதைக்கும், அந்த விசயநகரச் சமஸ்தானத்துக்கு ஆச்சரியமுண்டாகும்படியாய், நாகம நாயக்கனுக்கு ஒரு எதிரி ஏற்பட்டான். அவனாரென்றால், நாகம நாயக்கனுக்கு ஏகபுத்திர விஷயமான விசுவநாத நாயக்கனென்றவன் இந்தக்குமாரன், நாகம நாயக்கன் காசியாத்திரைபண்ணினதினாலே பிறந்தவன் இவனைக் கலவி கற்கிறதுக்கும், தனது நடைக்குத் தூரவாதியாகவும் விசயநகரத்திலேயே விட்டுவந்தான் விசுவநாத நாயக்கன் தன்னுடைய சாதுரியவல்லமைகளுக்கு அநேகந் தடவைதங்கள் காண்பித்திருந்தபடியினாலேயும், அவனுடைய விசுவாசநடத்தைகள் சம்மதத்தக்கவைகளாயிருந்தபடியினாலேயும், தன்னுடைய இராசாவுக்காகத் தன தகப்பனிடத்திலே யுத்தம்பண்ணவெகுசந்தோஷத்துக்கொள்ளுகிறது என்கிற இந்த ஒயல்லவாத வேலையானது அவனிட்டபடி அவனுக்குக் கொடுக்கப்பட்டது அவனும் நாகம நாயக்கனோடேபோரிலே ஒரு பலத்த சண்டையோடே புறப்பட்டுப்போய்த் தன் தகப்பனை முறியடித்துக் கைப்பிடியாய்ப் பிடித்துக் காவல்வைத்துக்கொண்டு மதுரைக்குரியவனுகிய இராசாவை அந்தச் சிம்மாசனத்திலே மறுபடியும் ஸ்தாபித்துச் செய்ததோடே விசயநகரத்துக்குப் போய்த் தன தகப்பனைக் கிஷ்ணராயன் கையிலேயொப்புவித்தான் அவ்விடத்திலே அந்தக் குமாரனுடைய குணங்களுக்காக அவன் தகப்பனைக் கிஷ்ணராயன் மன்னித்துவிட்டான் பிறகு அந்த மதுரை இராசா சீக்கிரத்திலிறந்துபோனான் அவனுக்குச் சந்தானமில்லாதபடியினாலே விசுவநாதநாயக்கன் விசயநகரத்திராசாவினாலே அஸ்தாந்தகராசனாக மதுரையிலே ஸ்தாபிக்கப்பட்டான். அப்படியிருக்க, விசுவநாதநாயக்கனைப் பாண்டியராசாவுக்கு உதவிக்காக அனுப்பப்பட்டபடைத்தலைவனாகவும், அந்தச் சுதந்தரிகமான இராசரீகத்தை அபகரித்தவனாகவுஞ் சொல்லுகின்றது எப்படியிருந்தபோதைக்கும் விசுவநாதநாயக்கன் இந்தப் பாண்டியராசாவை மதுரையிலே முதலில் ஸ்தாபித்தானென்கிறதும், பிறகு அந்த இராச அதிகாரத்தைத் தானே அபகரித்தானென்கிறதும் அதைப்பற்றி அவனைத் தண்டிக்கிறதற்கு விசயநகரச் சமஸ்தானத்தார் தாமசித்திருந்தார்களென்கிறதும், ஏனென்றால் தாமசித்திருந்தார்களென்றால், அவர்களுக்குப் புதுப்பகையாளியாகிய விசயப்பூராசசங்கதியிலே நோக்கமாய் மிகவுமுழைத்துக்கொண்டிருந்தபடியினாலே மிகவுந் தூரத்திலிருக்கிற தெற்குத்தேசங்களிலே நடந்திருந்த காரியங்களைக்குறித்துக் கவனிக்கக்கூடாமலிருந்ததென்கிறதும் இந்த இரண்டு சாதனங்களினுடைய மதத்தளிப்பினாலேயும் நன்றாய்த்தெரிய வருகின்றன.

(இன்னும் வரும்)

Life of Mohammed —மகமதுவின் சரித்திரம்

௰௧. அதிகாரம்

(Wine and games of chance forbidden—Sophyan, son of Caled, slain—War of the Ditch)

அபூசோபியன் என்பவர் இத்தருணத்திலேதமக்கு வாய்த்த நயநஷ்டங்களை சிந்தியாமல் [illegible] தொடராமல் விட்டுவிட்டார் அடுத்த மற்றவருடத்திலே மூன்றாங்களத்தில மகமதுநபியோடேயுத்தபோரென்றெறுவிசேஷமனுபவிலுா அந்நபியும் அதற்குடம்பட்டாராயினும் போர்தொடங்க ஒரு வருடத்துக்குமேலே சென்றுவிட்டது. இக்காலத்திலே அதாவது கிறிஸ்த்தாத்தம் (௬௱௨௰௬) க்குச்சரியான ஹிசயிராவில (௪) ம ஆண்டிலே மகமது தமமுடைய பட்சத்தார் மதுபானமுட்கொள்ளவுஞ் சூதாடவுந் தகாதென மறுத்தார் எப்படியெனில் *உமயிடத்திலே மதுபானமுட்கொள்ளவுங் கவறுருட்டவுங் கேட்பார்கள் அவற்றிலே பாரமான பாவமும் மனிதருக்குநயமான சிலகாரியங்களுண்டானாலும் நயத்தைப் பாவம் வெல்லுவிடும்" இப்படிவிலக்கின காரணம் யாதெனில் அவருடைய சீடருக்குள்ளே பேதங்களும் கருவியங்களும் அவைமூலமாய் வருகின்றனவென்று கண்டதினாலே 'சத்தியவிசுவாசிகளே மதுபானமுஞ் சூதும் அரோசமானவைகள் அவை அலகையின் தொழிலே நீங்கள் சீரிய செல்வராம்படி யவற்றையொழிந்துவிடுங்கள் உங்களுக்குள்ளே பிரிவினை பகைகளை விதத்தும்படியும் கடவுளை யாச்சிப்பதனுலும் பிரார்த்தனையிலுநின்று உங்களை ஏய்க்கும்படியும் அலகையானது திரிகின்றனபின் அவற்றை ஒழிந்துவிடீரா!'' அவைமூலமாய்ச் செலகாலத்தில விளைந்தபாவம் வருகாலத்தில நன்னடையாற பிராயச்சித்தமாகும் ''ஆலைகளை விசுவாசித்து நல்வினையையியற்றுகிறவர்கள் மதுபானஞ் சூதுகளை விலக்குமுன் அவற்றை நடப்பித்தாலும் அவர்கள் கடவுளையஞ்சி விசுவாசித்து நன்மைசெய்து பிறகாலத்து மிவைபோன்று நடந்து கடவுளுக்கமைந்து நடப்பரேல், அவர்களிலே பாவமாயதொன்றுந் கடவுளுக்கும் அவருடைய அப்போஸ்தலனுக்குமமைந்து உங்களைப்பற்றுச் சாக்கிரதையாயிருங்கள் ஆனாலும்புறங்காட்டுவீர்களானால், நமது அப்போஸ்தலனுடைய கடமை அம்பலத்தூற பிரசங்கஞ்செய்வது மாத்திரமேயென்றறிந்துகொள்ளுங்கள் ''† இறப்பிவழுவுமாசாரங்களையுடைய சில முஸ்லிம்கள், மேலவிலக்கப்பட்ட மதுவையுட்கொண்டாலும் சாட்சிப்பிரமாணக்கமாயுணமைகண்டமற்றவர்களோ அதனை விலக்கி உட்கொள்ளவோ பாவமென்று சொல்லவுமாத்திரமல்ல அதை உண்டாக்கும்படி பழங்களையாலையாட்டுவதும் விற்பனவு கொள்ளவுஞ்செய்வதும் அதினால்வந்த பணத்தை

* கோறுன உ அதி † கோறுன ரு அதி

கொண்டு சீவியம் விடுவதும் குற்றமாய்க் கொள்வார்கள். இச்சரித்திரப்பகுதியிலே மகமதுவின் கீர்த்திப்பிரதாபத்தை வேரோடுங் கெடுக்கக் கறையாக்குகின்றது என்னவெனில் காலேட்டென்பவரின் மகன் சோபியன் என்பவர் தம்மை நிர்மூலமாக்கும்படி சேனை சேர்க்கிறாரென்று மகமது கேள்விப்பட்டபோது அவரைச் சதிசெய்யும்படி ஒனியஸ் என்பவரின் மகன் டலமாலடிருற்று* (Dhul Mall Dhrat) என்னுங் காண்டைப்போற்ற அப்டலாவென்பவரிடத்திற் சொல்ல அவர் மகமதுநபியின் கற்பனைக்கிசையச் சோபியானென்பவரை ஆசாவின் பள்ளத்தாக்கிலே சங்காரம்பண்ணி அக்கணமே மகமது இடத்தில் வந்து சொல்ல அந்நபியானவர் தமது நட்புக்கு முத்திரையாகத் தமது பிரம்பைக்கொடுத்தார். இச்சரித்திரவின் ஐந்தாம் ஆண்டிலே அகழியின் போர் அல்லது சாதிகளின்போர் என்பது நடந்தது. அப்போரிலே சிலகாரியங்களைத் தொட்டலாதிருக்குமேல், மகமது முற்றுமழிந்து போவார்போலே, அயற்றேசங்களிலுள்ள யூதர் முதலிய சாதிகளுடன் கோறீசர் என்பவர்கள் சேர்ந்துகொண்டு பதினாயிரஞ் சேனைகளைக்கூட்டிக்கொண்டு தங்கள் தொன்றுதொட்டமாக்கத்துக்கு எதிரியான மகமதுவைப் போரிலேற்றுயத்திலுவை முற்றிகைபோடும்படி வந்தபோது மகமது பாரசீகிய சாவிமோனுடைய மந்திராலோசனையைக்கொண்டு பட்டினத்தைச் சூழ ஆழிய அகழியுண்டுபண்ணுவித்து அதன் பின்னணியில் ஒருமாதம் அரண்காத்திருந்தான். இவ்வேளையிலே இருதிறத்தாரும் அம்பினாலுங் கவண்டினாலுங் காயப்படுத்தினார்களேயன்றி பின்னொரு சமாசாரமுமில்லை. இத்தருவாயிலே மகமது தமது சத்துருவின் சேனைகளின் அதிகாரிகளைத் தந்திரோபாயத்தாலும் ஒற்றராலுந் தன் வசியமாக்கத் தெண்டித்தாரென்று ஐதிகத்தால் விளங்குகின்றது. சிலரைத் தன் வசியமாக்கினதின்மேல், அவர்கள் காரணமாய் மற்றவர்களுக்குள்ளே பேதாபேதங்களை விளைவித்து இதனாலே சத்துருவின் பாசறைவீடுகளைக்கிழப்பித்து அவர்களில் மிகுதியானவர்களைப் பாளயத்தை விட்டகன்றுவிடப்பண்ணி ஒழிந்தவர்களிலே திடுக்காட்டவாட்டங்களைக் கிளப்பிக் கோபங்கொண்டுங் கடவுளை வதஞோதிரமாய்க் கண்டதால் அவர்கள் பலங்குறைந்து பயம் நிறைந்து கலங்கி மலங்கப்பண்ணினார். எப்படியானால், சத்துருக்கள் அரணவளைந்திருக்கும்போது விபரீதமானக் கொடும்புயலொன்று கிளம்பிச் சத்துருக்களினுடல்களை விறைக்கப்பண்ணி முகங்களைப் புழுதியாற் போர்த்துப் பாசறைவிளக்குகளைத் தணித்துப் படங்குவீடுகளை ஆகாயமார்க்கமாய் வீசித் துரகப்படைகளையும் அணிகொலைக்க இத்துடன் தேவகணங்களுங் கூடி அவர்களின்மேல் பயாந்தகாரமப்பட அவர்கள் அல்லா அக்பார் என்று ஓலமிட்டலறக் கணங்கள் பாசறையைவிட்டுச் சத்துரு உயிர்கொண்டு பிழைத்தோடித் தப்பிக்கொள்ளத்தக்கதாய மனோவிரட்டலையுண்டாக்கினார்கள். மகமது இவ்வத்தியாரியங்கள் தன்னிமித்தம் தேவகடாட்சமாயுண்டாயினவென்பதை மறந்துபோனதுமில்லை. பிறகாலங்களிலே தமது பட்சத்தாருக்கு இவைகளையெடுத்துக்கூறி ஆற்றித் தேற்றாமல் விட்டதுமில்லை. † 'சத்தியவிசுவாசிகளே மார்க்கபேதிகளின் சேனை உங்கள்மேல் வந்தபோது நாம் கடும்புயலையும் நீங்கள் காணாத தூதர் கணங்களையும் அவர்களுக்கெதிராயனுப்பினோமென்பதையும் மறவாதேயுங்கள்'' மேலேசொல்லிய செயல் மனுஷீகமாயேனுந் தேவாதிகமாயேனு நடந்தாலு மெப்படியேனுமிருக்கட்டும் அச்செயல் நடந்ததொட்டு மகமதுவின் பிரபலியத்தைத் தடுக்கவேண்டுமென்றெண்ணம் கோறீசரைவிட்டகன்றுபோகக் கலக்கமும் முடிந்துபோயவிட்டது.

* டலமாலடிருற்று என்பதற்கு "எலற்றையும் விரைவாய்த்தலையிடுகிறவன்" என்பது பொருள்

† கோறுன் ௩௩ அதிகாரம்

(Missionary Enterprises in the South Seas)

தென்சமுத்திரத்தில் நடந்த சங்கதி

௱௯௯ம் பக்கத்தினின்று.

நாங்கள் (இராயத்தோங்கு) தீவிலிருக்கிறபொழுது என்னுடைய மனைவி வியாதியாயிருந்தாள். ஒருநாள் நான் தனியயிருக்கிறபொழுது இந்த (ஏழுவி) தீவ்வவிட்ட (நாவிகேற்றோ) (நீயுகெப்பிறிடீச) முதலிய தீவுகளிலிருக்கிறவர்கள் இன்னுஞ் சுவிசேஷத்தைக் கேள்விப்படாமலிருக்கிறபடியால் அவ்விடத்திலும் நாங்கள் போய்ச் சுவிசேஷத்தைப் பரம்பப்பண்ணுவது நமது கடமையாயிருக்கிறதேயென்றெண்ணினேன். அதிகாரியத்தைப்பற்றி (லண்டன்) கூட்டத்தாருக்கும் அவர்களுடைய யோசனையை அறியும்படிக்கு (௲௮௱௨௪)ம் ஆண்டளவிலே ஒரு காகிதமும் அனுப்பியிருந்தேன். இந்த யோசனையை, நான் (இராயத்தியாவை) விட்டுப் புறப்படுமுன்னே என்னுடைய மனைவிக்குச் சொன்னேன். அவள் கேட்டுச் சொன்னதென்னவெனில் 'நீர் போகவேண்டியதாயிருக்கிற பயணத்தின் தூரம் ஆயிரத்தெண்ணூறு அல்லது இரண்டாயிரம் மயிலுக்கிருக்கும். ஆறுமாதத்துக்கு நான் தனித்தவளாயிருக்கவேணும். அல்லாமலும் நீர் போகவிருக்கிற தீவின் சனங்கள் மிகவும் பொல்லாதவர்களென்று கேள்விப்பட்டிருக்கிறோம். நீர் போனவிடத்தில் நல்லாங்குபோலவொரு பொல்லாங்கு உமக்கு நேரிட்டால் நானும் இந்தக் குழந்தைகளுமாக இவ்விடத்திலிருந்து துயரப்படவேண்டிவருமே. ஆகையால் நீர் போகத்துணிந்த இந்தப் பேச்சைப் பெலக்காதில் விழுத்தலாமாவென்று கேட்டாள்." அவளிவ்விதமாய்ப் பேசினதினாலே என் எண்ணத்துக்கு இணங்கமாட்டாளென்றறிந்து அவளோடே மறுபடியும் அதைப்பற்றிப் பேசாமல் மனதிலே வைத்துக்கொண்டேன். இதற்குக் கொஞ்ச நாளைக்குப்பின்பு அவளுடைய வியாதி அதிகப்பட்டுச் செத்துப்போவாளென்று நாங்கள் நினைக்கத்தக்கதாக வருத்தப்பட்டாள். அப்பொழுது சமுசாரத்தின் அடுக்குகளெல்லாம் உலைச்சலாய்க் கொண்டது.

இதற்கிடையிலே நாங்கள் பராபரனைப்பார்த்து மன்றாடினோம். அப்பொழுது பராபரனெங்கள் வேண்டுதலைக் கேட்டாரென்பதற்கு அத்தாட்சியாகப் பத்துப் பதினைந்து நாளைக்குள்ளே அவளுக்குச் சற்றே சகாயமாயிற்று. ஒருநாட் சாயந்தரம் நானவள் துன்பமாய்ப் படுத்திருந்த அறைக்குள்ளே போனேன். அப்பொழுது அவள் எனக்குச் சொன்னதென்னவெனில் "நீர் தூரமாயிருக்கிற தீவுகளுக்குச் சுவிசேஷத்தைப் போதிக்கப் போகவிருந்தபொழுது உம்மைப் போகவிடாதபடிக்கு நான் மறித்ததினாலே எனக்கிந்தக் கடுதியான பெரிய வியாதி வந்ததாகுமென்று சொன்னதுமல்லாமல் இன்னும் நீர் போகாதபடிக்கு இருந்தாற் பராபரனொருவேளையென்னை இவ்வுலகத்தை விட்டு எடுத்துப்போடுவாரென்று சொல்லி" நான் போகநினைத்திருந்த அந்தத் தீவுகளுக்குப் போகச் சம்மதித்தாள். இவளிப்படிப்பட்ட எண்ணத்தைச் சொன்னபொழுது இவளுக்கு இந்த எண்ணந் தேவசெயலினாலே வந்திருக்கவேணுமென்று என்மனதிலே யுணர்ந்துகொண்டு இந்தத் தூரமான பயணத்துக்குப் போகக் கப்பலில்லாததினாலே ஒரு கப்பலைக்கட்டி முடிக்கத் தீர்மானித்துக்கொண்டேன். கப்பல் கட்டுகிறதற்கு என்னிடத்திலே தளபாடமில்லாததினாலுங், கப்பலுக்கு இரும்புவேலை செய்வதற்குத் துருத்தியில்லாததினாலும் மேலும் இதுமுதலிய எண்ணெய்களை யுண்டுபண்ணும் வித்தையைப் பிரயாசப்பட்டுச் சாத்திரப் புத்தகங்களிலே வாசித்தறிந்திருந்து முன்னொண்ணுவதற்கான தளபாடங்களைச் சம்பாதிக்கக்கூடாததினாலும், எனக்குக் கப்பல் கட்டும் வித்தை கொஞ்சமுந் தெரியாததினாலும் அதிகமாய் மனதிலே முட்டுப்பட்டேன். ஆகிலும் நான் பண்ணின தீர்மானத்தின்படியே மிகவும் பிரயாசப்பட்டு ஒரு கப்பலை மூன்று மாசத்துக்குள்ளே கட்டிமுடித்தேன். எல்லாருமறிந்திருக்கிறபடி ஒரு கப்பலைக்கட்டுவதற்கு முதலாவது துருத்தியும் இரும்புவைத்துக் காய்ச்சுகிறதற்கு வசதியானவொரு உலையுந் தேவை. இவ்விடத்திலே துருத்தி அகப்படாததினாலே என்னிடத்திலிருந்த மூன்று வெள்ளாடுகளின் தோலையுரித்து ஒரு துருத்தியை மூட்டினேன். ஆகிலும் அது நமது கவலைக்குக் கூடாமற்போயிற்று. என்னிடத்திற் பழைசாய்க்கிடந்த ஒரு துருத்தியைச் சீப்பத்தேதலாமென்று பார்த்தவிடத்தில் அதின் தோலையுமெலி துண்டித்துப் பண்ணிப்போட்டதைக் கண்டேன். இவைகளைப்பற்றியும் நான் மிகவும் மனத்துன்பமடைந்தபின்பு உலையில் ஊதிக்கொண்டிருக்கத்தக்க ஒரு வாயுச் சாம்பிசு சூத்திரத்தையுண்டுபண்ணினேன். இதற்குப் பின்பு கரிகளையும் பட்டையையும் மற்றுமுள்ள கடுத்த தளபாடங்களையுந் தேடிக்கொண்டு நான் சேகரமாய்க்கொண்டுவந்து வைத்திருந்த இரும்பிற் கொஞ்சமெடுத்துச் சில ஆயுதங்களைச் செப்பண்டேன். உலையிலே வைத்திருந்த துண்டிரும்புகளொன்று அக்கினியினாலே இளகப்படுகிறதையும் அப்படி இளகப்பட்ட இரும்புகள் பலபல ஆயுதச் சாடையாய்ச் செய்யப்படுகிறதையுங் கண்டதினாலே முன்னொருபொழுதும் இரும்பையும் இரும்பாயுதங்களையுங் கண்டிராத பிரதானிகள், முதலாளிகள், ஆ

பஞ்ச தந்திரக் கதை

சுகிர்லாபதந்திரம், அல்லது நட்புப்பேறு

[௱௯௨-ம் பக்கத்தினின்று]

PANCHA-TANTRA-KATEI.

Sugerlapam, or the art of making Friends

சம்பகாவதியென்னும் பட்டணத்திற் சூடாகர்ணனென்னும் ஒரு சந்நியாசி உண்டு மிகுந்த சோற்றைக் கப்பரையின் மேற்போட்டு உறியின் மேல் வைத்துவிட்டு நித்திரைபண்ணிக்கொண்டிருப்பான் பின்பு அந்தச் சோற்றை நான் தின்றுகொண்டு சுகமாகவிருக்கிற நாளில், அங்கே வீணாகர்ணனென்னுமொரு சந்நியாசி வந்து அவனோடே கூட அநேக கதாப்பிரசங்கம்பண்ணிக்கொண்டிருக்கையில் அந்தச் சூடாகர்ணன் கையில் ஒரு தடியினாலே பூமியைத் தட்டிக்கொண்டு சோற்றைக் காப்பாற்றிக்கொண்டிருந்தான் அப்போது வீணாகர்ணன் தன்னுடைய கதையை அநாதரவுபண்ணிக்கொண்டு வேறேயென்ன வியாபாரத்திலிருக்கிறாயென, சூடாகர்ணன் உன் வார்த்தையை யநாதரவுபண்ணவில்லை ஆனாலும், இவ்வெலி என் பாத்திரத்திலிருக்கிற அன்னத்தை நாடோறுந் தின்கிறது அதை ஓட்டுகிறேனென்ன, வீணாகர்ணன் அப்போது உறியைப் பார்த்து அவனுக்குச் சொல்லுகிறான் கொஞ்சப் பலமுள்ள இந்த எலி இவ்வளவுயரம் எப்படிக் குதிக்கிறது ஆகையால் இதற்கேதோ ஒரு காரணமிருக்கவேண்டும் அது தானேதுவாயிருக்கலாமென்றாலோசித்துப் பார்த்தால், மிகவுமிங்கே திரவியமிருக்கும் ஏனென்றால் உலகத்திலே திரவியமுள்ளவர்கள் பலமுள்ளவர்களாயிருக்கிறார்கள் அசாத்தியமான காரியங்களைச் சாதிக்கிறார்கள் இராசத்துவத்துக்கு மிது காரணமாகும் எல்லா மிதனாலாகின்றனவென்று சொல்ல, அந்தச் சந்நியாசி இதைக்கேட்டு மெய்தானென்று நம்பி பூமியை வெட்டி ஐயோ! என் திரவியத்தை எடுத்துக்கொண்டான் அன்றுதொடங்கி நான் இளைத்துப்போனேன் பின்பு எனக்கு இரையுங் கிடையாததினால் மெள்ள மெள்ள நடந்துகொண்டிருக்கையில், அந்தச் சந்நியாசி என்னைப் பார்த்துப் பார், இந்த எலி இப்போது தன் சாதித்தன்மையை அடைந்திருக்கின்றது முன்னிருந்த தன் மதம் போய்விட்டது ஆகையாற் பணமில்லாதவர்களை எல்லாரும் அற்பமாக நினைக்கிறார்களென்ன இதைக் கேட்டு நான் இப்போது இங்கிருக்கிறது சரியென்றிதை வேறொருவரோடுஞ் சொல்லலாகாது பொருளிழவும், இரகசித்திரமும், தானமும் மானமும், அவமானமுமாயுள்ளதென்முமாகிய இவைகளைப் புத்திமான் வெளிப்படுத்தலாகாது, தன் விதிப்பிரதிகூலமாயிருக்குங் காலத்திற் பராக்கிரமமும் முயற்சியும் வீணாகின்றன. ஆகையாற் பணமில்லாதவனுக்கு வனவாசத்தைக் காட்டிலுஞ் சுகமில்லை எவ்விடத்தில் நாம் பணக்காரனாயிருந்தோமோ அந்தவிடத்திலே ஏழையாயிருக்கிறது உத்தமமல்லவென்றும், மறுபடியுமிழந்த பணத்தை எடுத்துக்கொள்ள ஆயத்தப்பட்டேன் அப்போது சந்நியாசி என்னைத் தடியாலடித்தான் அதினாலே மிகவுந் துக்கப்பட்டு உன் சிநேகத்தோடே கூட இங்கே வந்தேனென்ன, மந்தரன் மித்திரா, நீயிதனால் அதைரியப்பட்டுறைவிடந் துறந்தோமென்று வருத்தப்படவேண்டாம் ஏனெனில், சாதுக்கள் எங்கேபோனாலும் மரியாதை பெறுகிறார்கள் சிங்கம் வேறொரு காட்டுக்குப்போனாலும் புல்லைத் தின்கிறதேயில்லை, யானையையே தின்னும் ஆகையால் உற்சாகமுள்ளவன் சந்தோஷமுள்ளவன் தைரியசாலி, சூரன், கள்ளமில்லாதவன், இவர்களிடத்தில் இலட்சுமிதானே வந்தடைகிறாள் நீ பணமிழந்தாலும் எப்போதுஞ் சந்தோஷத்தோடே கூடியிருக்கிறாய் ஆகையால், உனக்கிருக்கிற சுகம் பணத்தாசையான மயக்குள்ளவர்களுக்கில்லை இன்னுங் கேள், மேகச்சாயை, துட்டனுடைய தயை, இளம்புல், யௌவனம், தனம், இவைகள் வெகு நாளைக்கு நில்லாவாகையால் இவை இழந்துபோனால் அழுதுகொண்டு ஆகாரத்தைக் குறித்தேங்கியிருக்கலாகாது ஏனெனில் எவன் கருப்பத்தில் விடுகிறானோ அவன் பிறக்கிறதற்கு முன்னே தானே தாய்முலையிற் பாலையமைத்து வைக்கிறான். அப்படிப்பட்டவன் ஆயுசுள்ளவரைக்குங் காப்பாற்றமாட்டானோ? நீ கல்விமானாயிருக்கிறதினால் இவையெல்லாம் உமக்குத் தெரிந்தேயிருக்கும் இனிச் சிநேகமாய் என்னிடத்திற் சுகமாயிருவென, இவையெல்லாங் கேட்டுப் பிறகு லகுபதனன் சொல்லுகிறது—மந்தரா, நீ சகலகுணசம்பன்னன், மேலுஞ் சற்சனன் சாதுக்களுக்கு வந்த ஆபத்தைச் சாதுக்களே நிவர்த்திபண்ணுகிறார்களென்றறிந்து நாங்கள் உன்னை நாடி வந்தோமென்று சொல்லி நீண்ட பெரிய மரத்தின்மேற் போயுட்கார்ந்து தன் சுபாவப்படியே இங்கும் அங்கும் பார்த்துக்கொண்டிருக்கையில் ஏதோ ஒரு பயமுகாந்திரத்தையறிந்து அவ்விரண்டுக்கும் நீங்களுங்களிடத்தில் ஒளித்துக்கொண்டிருங்களென்ன, மந்தரன் தண்ணீரிற் போயிற்று எலி வளையினுள் நுழைந்தது. காகம் விருட்சத்தின் நுனியிலிருந்து பார்க்கையிலே தொன்றுங் காணப்படாமையாற் பிறகு அம்மூன்றும் ஒன்றுக்கொன்று பேசிக்கொண்டிருக்கையில், அவைகளின் சமீபத்திற் சித்திராங்கனென்னும் ஒரு கலைமான் வந்து சொல்லுகிறது, நான் வேடர் பயத்தால் உங்களிடத்திலிருக்கலாமென்று வந்தேனென்ன, அதைக் கேட்டு மந்தரன் அதற்குச் சமமானம்பண்ணி இது உன் வீடு நான் உன் சேவகனென்றெண்ணிக்கொண்டு சுகமாயிருக்கவேண்டுமென, முகமலர்ந்து மனங்கலந்த வின்சொற் சொல்லப் பிறகு அதுவும் அவைகளுடன் நட்புக்கொண்டிருந்தது அப்படியிருக்கையில் ஒரு நாள் சித்திராங்கனென்னுமான் புல் மேய வேறொருவிடத்துக்குப் போய் மீண்டு சாயங்காலம் வராமையால், ஆமை மேய்ப்போன மான் இன்னைக்குச் சாயந்தரம் வரவில்லையென்று விசனப்பட, அதை அறிந்து எல்லாம் விசனமடைந்து மறுநாள் விடியற்காலத்திற் காகம் பறந்து நாலு பக்கத்திலும் பார்த்துக்கொண்டு போகையிற் சித்திராங்கன் தோல்வலையில் அகப்பட்டிருக்கிறதைக் கண்டு அதனிடம்போய்ச் சொல்லுகிறது, மித்திரா—உனக்கிந்த அவத்தை எப்படி நேரிட்டதென, மான் இப்போது இதைக் கேட்டுப் பிரயோசனமில்லை ஆனாலும், நீபோய் இரணியகனைச் சீக்கிரமாயிட்டுக்கொண்டு வந்தால் அவன் வேடன் வருவதற்கு முன்னே என் பாசத்தை அறுத்தென்னை விடுவிப்பான் வேடன் வந்தால் ஒரு உபாயமும் நடவாதென, இதைக் கேட்டவுடனே விரைவாய்ப்போய் அவைகளுடனே நடந்த காரியத்தைச் சொல்லி இரணியகனையிட்டுக்கொண்டுவந்தது. வந்த இரணியகன் மானைப் பார்த்து நீ சமர்த்தனாயிருக்கையில் வலையில் எப்படி அகப்பட்டாயென, மான் வல்லமையிருந்தாலும் வருவது வரும், இப்போதென்னைச் சீக்கிரமாய்விடுவி எனக்குப் பழைய பயமிருக்கின்றது ஏனென்றால், முன் நான் குட்டியாயிருக்கையில் வேடன் வலைகட்டி என் கூட்டத்தை வளைத்தான். ஆனாலும் மற்றவர்கள் பெரியமான்களாயிருந்தபடியாற் குதித்து வலையைத் தாண்டிப்போயின, எனக்குக் குதித்தோடச் சக்தியில்லாதிருந்ததினால் வேடன் பிடித்து இராசாவினிடத்திற் கொண்டுபோனான் ராசா வாங்கித் தன் பிள்ளையிற் கொடுக்க அங்கே நான் வெகுநாள் இருந்துகொண்டிருக்கையில் ஒரு நாள் மேககர்ச்சனையைக் கேட்டு நான் மிகவுஞ் சஞ்சலப்பட்டு மனுஷபாஷையினால் எனக்குள்ளே பேசிக்கொண்டேன் ஏனென்றாற் காற்று மழையாற் பிடிக்கப்பட்டு மான் கூட்டங்களோடும் போய் அவற்றின் பின்னே நானெப்போது ஓடுவேனென, ராசகுமாரன் இதைக் கேட்டு நாற்றிசையும் பார்த்து என்னைப் பார்த்தான், பிறகு சற்றுநேரஞ் சும்மாயிருந்து இது மனுஷனைப்போலப் படியுச்சரித்தது. ஆகையால் இது ஒரு விசித்திரப்பிராணியாயிருக்கிறதென்று நினைத்துப் பயந்து சுரத்தில் விழுந்தான். [இன்னும் வரும்.]

௪ம் அதிகாரம்

அறன்வலியுறுத்தல்.—*The power of Virtue*

௩௬. அன்றறிவாமென்னா தறஞ்செய்கமற்றது
பொன்றுங்காற் பொன்றாத்துணை.

பு. நாமிப்பொழுது இளமைப்பருவத்தை உடைத்தாயிருக்கிறோம், ஆதலாலே முதுமைப்பருவம் வந்தபொழுது அறிந்து செய்வோமென்று நினையாமல், தருமத்தைத் தினந்தோறுஞ் செய்க, அந்தத் தருமமானது, இந்த உடம்பிலே நின்றும் உயிரானது இறக்குங்காலத்திலே அந்த உயிர்க்கு அழியாத துணையாம்.

Say not we will hereafter make choice (of virtue) be virtuous *now*, in the hour of death, she will be to you a deathless help. *Drew.*

Refer not virtue to another day
Receive her now, and at thy dying hour
She will prove thy never-dying friend *Ellis*

௩௭. அறத்தாறி துவெனவேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தானிடை.

பு. தருமமார்க்கத்தின் பிரயோசனம் இதுவாமென்று நாம ஆகமப்பிரமாணத்தினாலே தெரிவிக்கவேண்டுவதில்லை, பல்லக்கைச் சுமந்தவனோடே கூட அதிலிருந்துகொண்டு அதை நடத்தினவனிடத்திலே பிரத்தியட்சப்பிரமாணத்தினாலே காணப்படும்.

You need not describe (in books) the course of virtue, (point out to the sight) the bearer of a palankeen and him who rides in it * *Drew.*

Definitions of the words expressive of the actions of the mind, published in the last No

Concur	உடன்படுதல்	Rate	தரம்பார்த்தல்
Doubt	சந்தேகித்தல்	Ruminate	திரும்பச்சிந்தித்தல்
Demur	பின்போடுதல்	Confide in	உறுதியாய் நம்புதல்
Hesitate	தாமதித்தல்	Expect	காத்திருத்தல்
Scruple	ஐயுறுதல்	Anticipate	முன்னுணர்தல்
Waver	மனந்தளம்புதல்	Trust	நம்புதல்
Fluctuate	மனஞ்சலித்தல்	Await	வரவுகாத்தல்
Discern	தேர்தல்	Suspect	அசுகைகொள்ளல்
Distinguish	பகுத்தறிதல்	Acquiesce	சம்மதித்தல்
Appreciate	நயம்பண்ணுதல்	Coincide	ஏகநிலையாகுதல்
Estimate	கணிசம்பார்த்தல்	Foresee	முன்னறிதல்
Compute	கணக்குப்பார்த்தல்	Forget	மறந்துபோதல்

(From the Madras Almanac for 1842)

Hints on the Theory and Practice of Gardening.

(Continued from page 185, No 15)

From observations made in Europe it has been attempted to deduce the relative temperatures of the air and earth within the tropics Thus it is ascertained that in England the mean temperature of the earth is between two and three degrees higher than that of the air, the same ratio will probably be found to hold good in India This inference is confirmed by one set of observations in New Grenada, the mean temperature of the air of which for the warmest month is about 84½ while that of the earth, at one foot below the surface is 85° during summer According to this ratio the temperature of the earth at Madras during the months of November, December, January, February and March, should be between 79½ and 81° that of the valley of the Thames in July, one foot below the surface, has been found to be only 64 80° So great an excess of bottom heat must exert a very injurious influence on plants fitted for the lower temperature, by over stimulating and exhausting their excitability, enfeebling their powers and thereby incapacitating them adequately to perform the functions of assimilation by which their food is converted into suitable nourishment Is it possible in any way, so far to obviate these injurious effects of excessive heat as to enable us to cultivate plants of colder climates in warm countries?

This is an interesting question to the tropical horticulturist, but cannot, we believe, in the present state of our knowledge receive a satisfactory answer If with the view of affording plants of colder countries a lower temperature, we cultivate them under shade we deprive them of light, the agent by the aid of which the vital forces of vegetation are enabled to decompose the water, and carbonic acid, by which they are nourished and carbon in a solid state formed The quantity of carbonic acid decomposed being in proportion to the quantity of light which strikes the leaf and the healthiness in proportion to the quantity decomposed, the healthiness should be in proportion to the quantity of light it received by day This fact goes far to prove that we err when we endeavour to obtain a cooler climate by shading the whole plant, thereby depriving it of the light by the action of which it is enabled to assimilate its juices, in place of the soil only, a view which seems further confirmed by the result of Mr Foggo's experiment of placing the thermometer on a grass plot, the evaporation from which reduced the temperature 30° For this reason, it seems probable, we shall succeed better in raising early crops, by shading the soil and keeping it cool, while by liberal watering we furnish a constant supply of moisture both for evaporation from the soil and for free perspiration by which the plant keeps down its own temperature

The correctness of this inference was in some measure proved two seasons ago in the Madras Horticultural Society's Garden, the finest beet root of the season being raised in beds covered some inches thick with sand, which seemed to have the effect of preventing hardening from too copious evaporation and preserving the soil below always cool and moist though comparatively sparingly watered On this principle it seems not improbable, the true cause of the vigor and luxuriance of melon plants in the hottest seasons, may be partly attributed to their abundant foliage, which, forming a dense shade, preserves the soil cool, whilst the copious evaporation from their large leaves by keeping them cool, counteracts the heat of the solar rays to which they are exposed Last hot season but one some beds were planted with the sweet potatoe, the procumbent stems of which rapidly covered the soil as with a carpet from that time they continued to grow luxuriantly thro' the whole season, without requiring a drop of water, apparently from the same cause, as the soil under them was kept moist, and found several degrees cooler than that shaded by trees

The effect of high temperature on a plant is to stimulate and exhaust its excitability and enfeeble its powers of assimilation the primary object in Indian horticulture is to prevent these effects by artificial means In December 1840, observations made during fine clear weather with bright sunshine show, that the thermometer, in the open air and freely exposed to the sun, indicates at sun rise a temperature of about 70° and at 2 P M from 120° to 130° (at that high degree it is very unsteady) or a range of from 40 to 50 degrees in eight hours The heat of the surface of the earth, it is probable, exceeds even the higher indication The temperature of the air fluctuates rapidly, and it is probable that in immediate contact with a healthy plant the temperature never exceeds 90°. Not so the soil, it absorbs heat and puts with it very slowly, thereby maintaining a constant high temperature about the roots, keeping up night and day the stimulus and excitement by which the plant is enfeebled The object of our recommendation is to prevent this accumulation of heat about the roots, and allow plants to enjoy a more perfect period of rest during the night

We have extended these observations on heat far beyond the limits our space properly permit, in the hope of directing more attention, than has hitherto been bestowed, to the management of this most important agent in all horticultural operations (To be continued)

* The meaning of the 37th distich is, that the one as the fruit of his virtues in a former birth, enjoys the luxury of riding in a palankeen while the other, from former sin is doomed to the drudgery of bearing it.

வெஸ்லி ஆபிரகாம என்பவர் பாடிய

தோத்திர ஞானக்கும்மி.

கடவுள் வணக்கம்

(௱அம பக்கத்தினின்று)

நாலுபக்கத்துக்கனியையும நீங்கள நலமாயப் புசித்திடலாகு
மென்று [ஞானப்பெண்ணே யிரு
பேலநன்மைதீமையறியுங்கனியை விரும்பவேண்டாமென்றார்
அப்படிச்சொல்லியகன்றபின்பபோ அரவநதானேவாளேக்கண
ருவந்து
மெயப்படியுஙகள்விருப்பநதருங்கனிவேறுளவெனறது ஞானப்
பெண்ணே யக
அக்கனிதனைப புசித்தபின்ஞண்டவராதாமுக்கும ஏவாளு
க்குமபாமபுக்கும் [பபெண்ணே யென
தக்கபடிகொடிதாகவெகுசாபந்தானகொடுத்தாரடிஞான
அநதபபடிநன்மைதீமைகளாகுமஅருட்கனி உண்டசாபங்க
ளால [பெண்ணே யவ
வந்துபிறந்தவா துனபங்கள்பட்டு மரிக்கவுமாச்சடி ஞானப்
ஆறுநாள்தனனிலேவெவவேறுயபபிரித்தாணடவரெலலாம ப
டைத்தபினனா [னபபெண்ணே யக
வேறொழுமநாளைப்பரிசுத்தமாக்கியமேன்மையைக்காணடி ஞா